# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1861/13 - 2014 මැයි මස 6 වැනි අඟහරුවාදා - 2014.05.06

*1861/13 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாண ஆளுநர் அவர்களால் செய்யப்படும் பிரகடனம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 (ஆ) (8) (அ) பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், தென் மாகாண ஆளுநர் நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய ஆகிய நான், தென் மாகாணத்தின் ஏழாவது மாகாண சபையின் முதலாவது அமர்வு 2014, மே மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு தென் மாகாணத்தின் மாகாண சபை, சபைக் கூட்ட மண்டபத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய,
தென் மாகாண ஆளுநர்.

*ஆளுநர் அலுவலகம்,*
*காலி,*
*2014, ஏப்பிறல் 24.*

*5- 612/1*

---

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாண ஆளுநர் அவர்களால் செய்யப்படும் நியமனம்

*தென் மாகாண சபை ஆளுநர் நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தின் கீழ் இல. 154 (ஈ) (5) ஆவது யாப்பின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கௌரவ ஹத்தொட்டுவ கமகே வீரசுமன வீரசிங்க அவர்களினால் தற்போது வகிக்கப்படுகின்ற தென் மாகாணத்தின் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கலாசார மற்றும் கலைகள், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, மகளிர் விவகார மற்றும் வீடுகள் பொருளாதார மேம்பாடு, வீடுகள், கட்டட நிர்மாணம், மனித சக்தி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் ஆகிய அமைச்சுக்களின் விடயங்களுக்கு மேலதிகமாக கிராம அபிவிருத்தி விடயத்தையும் 2014.04.24 ஆந் திகதி முதல் ஒப்படைக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய,
தென் மாகாண ஆளுநர்.

*ஆளுநர் அலுவலகம்,*
*டிக்ஸன் வீதி,*
*காலி,*
*2014, ஏப்பிறல் 24.*

*5- 612/2*

---

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாண ஆளுநர் அவர்களால் செய்யப்படும் நியமனம்

தென் மாகாண சபை ஆளுநர் நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தின் கீழ் இல. 154 (ஈ) (5) ஆவது யாப்பின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கௌரவ உடலமத்த கமகே தயாவங்ஷ ஆரியதிலக அவர்களினால் தற்போது வகிக்கப்படுகின்ற தென் மாகாணத்தின் விவசாய, கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல், கூட்டுறவு அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களின் விடயங்களுக்கு மேலதிகமாக வாணிப விடயமும் 2014.04.24 ஆந் திகதி முதல் ஒப்படைக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய,
தென் மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
டிக்ஸன் வீதி,
காலி,
2014, ஏப்பிறல் 24.

5- 612/3

---

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் செய்யப்படும் நியமனங்கள்

தென் மாகாண சபை ஆளுநர் நெரங்ஜலா புஷ்பா குமாரி பாலசூரிய அவர்களினால் கீழ்க்கண்ட நியமனங்களைச் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

1. இலங்கை நிர்வாக சேவையில் விசேட தரத்தையுடைய சின்தக எஸ். லொக்குஹெட்டி அவர்கள் செயலாளர் பதவி வகிக்கும் தென் மாகாண சபையின் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கலாசார மற்றும் கலைகள், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை, மகளிர் விவகார மற்றும் வீடுகள் பொருளாதார மேம்பாடு, வீடுகள், கட்டட நிர்மாணம் மற்றும் மனித சக்தி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் ஆகிய அமைச்சுக்களின் விடயங்களுக்கு மேலதிகமாக 2014.04.24 ஆந் திகதி முதல் நடைமுறையாகும் வண்ணம் கிராம அபிவிருத்தி விடயத்திற்கு செயலாளராகவும் ;

2. இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு - I இலுள்ள சுமித் அலஹகோன் அவர்கள் பதில் செயலாளராகப் பதவி வகிக்கும் தென் மாகாண சபையின் விவசாய, கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல், கூட்டுறவு அபிவிருத்தி ஆகிய அமைச்சின் விடயங்களுக்கு மேலதிகமாக 2014.04.24 ஆந் திகதி முதல் நடைமுறையாகும் வண்ணம் வாணிப விடயத்திற்கு பதில் செயலாளராகவும்.

லால் சமரசேகர,
தென் மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஆளுநர் அலுவலகம்,
டிக்ஸன் வீதி,
காலி,
2014, ஏப்பிறல் 24.

5- 612/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.